# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1460/31 - 2006 සැප්තැම්බර් 02 වැනි සෙනසුරාදා - 2006.09.02

*1460/31 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் பிரகடனம்**

இலச்சினை



இலங்கையில் பகிரங்க அவசரகால நிலைமையொன்று இருக்கின்றமை காரணமாக, பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கினைப் பாதுகாத்தல், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணி வருதல் ஆகியவற்றுக்குப் பின்வருமாறு செய்தல் உகந்ததாகவிருக்கின்றதென அபிப்பிராயப்படுகின்றேன்.

சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தாலும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் இலங்கையெங்கணும் இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இரண்டாம் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென இப்பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்துகிறேன் என்பதை அறிவீராக.

இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இரண்டாம் நாளன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க.
சனாதிபதியின் செயலாளர்.

*9-654*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.